**செய்தி வெளியீடு எண்:670** **நாள்: 10.10.2017**

**மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 10.10.2017 அன்று தொழிலாளர் துறை அலுவலர்களின் பணித்திறனாய்வு கூட்டம் நடைபெற்றது.**

---

மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி **அம்மா** அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க இன்று (10.10.2017) மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மருத்துவர் நிலோபர் கபீல் அவர்கள் தலைமையில், தொழிலாளர் ஆணையர் திரு. க. பாலச்சந்திரன், இ.ஆ.ப. அவர்களின் முன்னிலையில் சென்னை நுங்கம்பாக்கத்திலுள்ள தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரிய கூட்டரங்கில் தொழிலாளர் துறை உயர் அலுவலர்களின் செயல்பாடுகள் குறித்த பணித்திறனாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஒவ்வொரு அலுவலரும் தத்தம் பணியை சீராகவும், முறையாகவும் செய்து தொழிலாளர்களுக்கு தரப்பட வேண்டிய சட்டப்படியான சலுகைகள் உரிய நேரத்தில் பெற்று வழங்கிடவும், மாநிலத்தின் தொழில் நல்லுறவை மேம்படுத்தவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

பணியாளர்கள் இழப்பீட்டுச் சட்டம், பணிக்கொடைச் சட்டம், பிழைப்பூதியச் சட்டம் உள்ளிட்ட தொழிலாளர்களுக்கு பணப்பலன்களை அளிக்கும் சட்டங்களின் கீழ் தாக்கல் செய்யப்படும் மனுக்களின் மீது முக்கியத்துவம் அளித்து, துரிதமாக விசாரணை நடத்தி, உரிய காலத்திற்குள் ஆணைகள் வழங்கிட அறிவுறுத்தினார்.

தொழிற்தகராறுகள் சட்டத்தின் கீழ் துறை அலுவலர்கள், வேலை நிறுத்தம், கதவடைப்பு போன்ற சம்பவங்கள் ஏற்படாமல் தடுத்தும், தொழில் உறவு, தொழில் உற்பத்தி மற்றும் தொழில் அமைதி காத்திடும் வகையில் செயல்பட்டும், புதிய தொழில்கள் நம் மாநிலத்தில் துவங்கவும், அதன் மூலம் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் வகையிலும் முனைப்புடன் செயல்படுமாறு கேட்டுக் கொண்டார்.

சட்ட அமலாக்க அதிகாரிகள் தொழிலாளர்களின் நலன் காக்கும் தொழிலாளர் நலச்சட்டங்களை செயலாக்கம் செய்து சட்டத்தின் பலனை தொழிலாளர்கள் பெறும் வகையில் செயல்படவும் அறிவுறுத்தினார்.

நுகர்வோர் நலன்களை பாதுகாக்கும் பொருட்டு, சட்டமுறை எடையளவு சட்டத்தினை அமலாக்கம் செய்யும் இத்துறை அலுவலர்கள், பொதுமக்களுக்கு அரசால் பொது விநியோக திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் பொருட்கள் மற்றும் மக்கள் பெரிதும் பயன்படுத்தும் பெட்ரோலிய பொருட்களின் விநியோகம் ஆகியவை சரியான அளவில் அளிக்கப்படுவதையும் பொட்டலப் பொருட்களில் அறிவிக்கப்பட்ட அதிகபட்ச விற்பனை விலைக்கு கூடுதலாக பொட்டலப்

பொருட்கள் விற்பனை செய்யப்படுவதை தடுத்திடவும் தொடர்ச்சியான ஆய்வுகள் மேற்கொண்டு கண்காணிக்குமாறு அறிவுறுத்தினார்.

குழந்தை தொழிலாளர் முறையினை அகற்றுதல் மற்றும் கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழித்தல் ஆகியவற்றில் சிறப்பாக பணியாற்றிடவும், மீட்கப்படும் கொத்தடிமை தொழிலாளர்களுக்கு உடனுக்குடன் நிவாரணத் தொகையினை வழங்கிட நடவடிக்கை எடுத்திடவும் அறிவுரைகள் வழங்கினார்.

டெங்கு ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டது. தொழிலாளர் துறை அலுவலர்கள் டெங்கு ஒழிப்பு தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து எக்ஸ்னோரா தொண்டு நிறுவனத்தை சேர்ந்த டாக்டர் கிருஷ்ணகுமார் விழிப்புணர்வு குறித்து உரையாற்றினார்.

தொழிலாளர் துறையின் கீழ் செயல்பட்டு வரும் 17 அமைப்புசாரா நலவாரியங்களின் பதிவு, புதுப்பித்தல், நல உதவி கோரும் மனுக்கள் ஆகியவற்றின் மீது பணித்திறனாய்வு மேற்கொண்டு, வாரியத்தின் நலத்திட்ட உதவிகள் உரிய காலத்தில் பயனாளிகளுக்கு சென்றடையுமாறு பணிகளை செவ்வனே செய்ய அறிவுரை வழங்கினார்.

இந்த ஆறாண்டு காலத்தில் 18,04,511 தொழிலாளர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டு 26,15,159 பயனாளிகளுக்கு ரூ.757 கோடி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தை தொழில் துறையிலே முதன்மை மாநிலமாக மாற்றுவதற்கு மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்கள் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தியதன் வாயிலாக உலகத்தின் அனைத்து பகுதிகளிலும் உள்ள முதலீட்டாளர்கள் நமது மாநிலத்தில் தொழில் தொடங்கியுள்ளதால் அதற்கு ஏதுவாக தொழிலாளர் நலச் சட்டங்களின் செயலாக்கம் மூலம் முதலீட்டாளர்கள் மற்றும் தொழிலாளர்களிடையே நல்லுறவை ஏற்படுத்தி சிறந்த முறையில்பணியாற்றிட அலுவலர்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் தொழிலாளர் துறையின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**